இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 24 ISSUE 02 FEBRUARY-2024 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



# பழமையாகப் போகாத ஆசீர்வாதங்கள்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN


செம்பட்டியில்
இயேசுவின்
பாதத்தில்
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
பிப்ரவரி
9
இரண்டாவது
வெள்ளிக்கிழமை
காலை 9:30 மணி
முதல்
2:30 மணி வரை
பிப்ரவரி
10
இரண்டாவது சனிக்கிழமை
காலை 9:30 மணி முதல்
மதியம் 2:30 மணி வரை
இடம் வானத்தின் வாசல், எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்


மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்
மதுரையில் எழுப்புதல்
உபவாச ஜெபம்
பிப்ரவரி
17
சனிக்கிழமை
9:30am
to
2:00pm
BRO. MOHAN C. LAZARUS
EVG.L.VINCENTRAJ
EVG.KALAVINCENTRAJ
இடம் இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம், பைபாஸ் ரோடு,
பழங்காநத்தம், PRC Depot அருகில், மதுரை

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். மத் 6:33-ல் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் என்றவர், முதலாவது எதைத் தேடனும், எதற்காக வாழ வேண்டும் என்பதை வேதாகமத்தில் நமக்கு அருமையாக விளக்கி கூறியுள்ளார். ஆகவே முதலும் முடிவும் நமக்கு இயேசு தான். கடந்த நாட்களில் நடைபெற்ற ஜனவரி 1-ஆம் தேதி புத்தாண்டு வாக்குத்தத்த கூட்டமும், இரண்டாவது வாரம் நடைபெறும் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை கூட்டங்களையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார், கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர். கர்த்தருக்குச் சித்தமானால் ஏப்ரல் 9-ஆம் தேதி முதல் 12-ஆம் தேதி வரை சுவிசேஷப் பயிற்சி முகாம் வைத்துள்ளோம். அதிலே கர்த்தருடைய தாசர்கள் கலந்து கொண்டு பயிற்சி கொடுக்க இருக்கிறார். அதிலே பங்குபெற விரும்புகிறவர்கள் உடனே பதிவு பண்ண வேண்டும். இது எல்லாருக்கும் அல்ல, முன்பதிவு செய்தவர்களுக்கு மட்டும் தான். தொடர்ந்து கர்த்தருடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்க, கர்த்தர் நமக்கு வாசலைத் திறக்கவும், நம்மைப் பயன்படுத்தவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தருடைய கிருபையால் நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் யூடியுப் சேனலில் ஒளிபரப்பாகும் **கர்த்தாவே என்னைக் கைதூக்கி விடும்** நிகழ்ச்சியும், காலை தோறும் **இயேசுவை தினம் பார்ப்போம்** நிகழ்ச்சியும் மிகுந்த ஆசீர்வாதத்தை கொண்டு வருகிறது. தவிர்க்க முடியாத காரணத்தால் ஜனவரி 20-ஆம் தேதி மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்திற்கு அண்ணன் மோகன் சி. லாசரஸ் அவர்கள் வரமுடியவில்லை. அதற்குப் பதிலாக பிப்ரவரி 17-ஆம் தேதி மூன்றாவது சனிக்கிழமை நடைபெறும் உபவாச ஜெபத்திற்கு வருகிறார்கள். தொடர்ந்து நம்முடைய தேசத்தில் எழுப்புதல் வரவும், வருகிற நாடாளுமன்ற தேர்தலுக்காக கருத்தாய் ஜெபிக்க வேண்டும். கர்த்தர் இதில் ஜெயம் எடுக்கவும் ஜெபிக்க வேண்டும். தொடர்ந்து இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்காகவும் கருத்தாய் ஜெபிக்கவும், தாங்கவும் மறவாதிருங்கள். ஆண்டவராகிய தேவன் தாமே நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.



*இயேசுவின் பணியில்,*

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)



# பழமையாகப் போகாத ஆசீர்வாதங்கள்

சகோ. L. வின்சென்ட்ராஜ்

பழமையாய்ப் போகாத பணப்பைகளையும், குறையாத பொக்கிஷங்களையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள். அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை. லூக் 12:33.

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வேதத்தில் பல காரியங்களை நமக்குச் சொல்லியிருக்கிறார். அதில் சில ஆழமான காரியங்களும், நம்முடைய மனதில் நாம் புரிந்து கொள்வதற்கு ஆச்சரியமான காரியங்களும் இருக்கின்றது. அப்படிச் சொன்ன காரியங்களில் ஒன்று தான் பழமையாய்ப் போகாதப் பணப்பை என்றார். ஆம் பழமையாய்ப் போகாதப் பணப்பை, இற்றுப் போகாத செல்வம் என்று சொல்லி இருக்கிறார். எவ்வளவு ஒரு மேன்மையான ஆசீர்வாதம். நம்முடைய தேவன் எந்த ஒரு காரியங்களையும் பழமையாய்ப் போகவோ அல்லது பலவீனமடையவோ விடமாட்டார். காரணம் அவர் நாட்களுக்குத்தக்கதாகப் பெலன் தருவார். **உபா 33:25-ல் உன் நாட்களுக்குத்தக்கதாக உன் பெலன் இருக்கும் என்றார். மட்டுமல்ல ஏசா 40:31-ல் கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ, புதுபெலன் அடைந்து, கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும், இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்** என்று சொல்லப்பட்டுள்ளது. ஆம் நாம் சோர்ந்துபோகவோ, பலவீனமடையவோ, பழையதாய்ப் போகவோ, ஒன்றுமில்லாமல் போகவோ தேவன் விடமாட்டார்.



அதே பெலன், அதே வல்லமை, அதே கிருபை, அதே ஆசீர்வாதம் என்றென்றைக்கும் நம்மேல் தங்கும்படி ஆசீர்வதிப்பார். யோசுவாவுக்கு வயது சென்றாலும் தேவன் அவனைப் பலவீனமடைய விடவில்லை. மோசே 120 வயதானாலும் **உபா 34:7-ல் அவன் கண்கள் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை.** அந்த அளவுக்கு தேவன் அவருடைய பிள்ளைகளைப் பெலனாகவும், புதியவர்களாகவும் வைத்திருந்தார்.
இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுலும் சொன்னார் **2 கொரி 5:17-ல் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியா யிருக்கிறான், பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின என்றார்.**
ஆம் நாம் பழைமையானவர்கள் அல்ல, பழைய சடங்காச்சாரங்களைப் பின்பற்றுகிறவர்கள் அல்ல. பழையதை விரும்பி புதியதை விடுபவர்கள் அல்ல. நாம் பழமையாய்ப் போகாத தேவனுடைய திட்டங்களையும், தரிசனங்களையும் பெற்றவர்கள். ஆகவே தேவன் நம்மை கட்டாயம் ஆசீர்வதித்து, ஒரு புதிய காரியங்களுக்குள் கொண்டு போவார்.
அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் **எபே 4:22-ல் அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள் என்றார்.**
பழையது சிறந்தது என்று புதியவைகளை விட்டு விடாதிருங்கள்.

இயேசு சொன்னார் **லூக் 5:37-39-ல் ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்து வைக்கமாட்டான். வார்த்து வைத்தால் புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம். புதுரசத்தைப் புது துருத்திகளில் வார்த்து வைக்க வேண்டும். அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும் என்றார்.** சிலர் பழையதை விரும்பி, புது ரசத்தை விரும்ப மாட்டார்கள் என்றார். ஆனால் நம்முடைய ஆண்டவராகிய தேவனோ பழையதாய்ப் போகாத ஆசீர்வாதங்களையும், அதே நேரத்தில் புதிய காரியங்களையும் நமக்குச் செய்து, நம்மை ஆசீர்வதித்து வழிநடத்தி வருகிறார்.
இதைத்தான் அவர் வேதத்தில் பல இடத்தில் சொல்லியிருக்கிறார். **லேவி 26:10-ல் போன வருஷத்துப் பழைய தானியத்தைச் சாப்பிட்டு, புதிய தானியத்துக்கு இடமுண்டாகும்படி, பழையதை விலக்குவீர்கள் என்றார்.** புதிய தானியத்திற்கு இடம் உண்டாகும்படி பழையதை உங்களை விட்டு விலக்குவீர்கள் என்றார். ஆம் நம் தேவன் பழைமையாய்ப் போகாத ஆசீர்வாதங்களையும், இற்றுப்போகாத பணப்பைகளையும் நமக்குத் தந்து அவரே நம்முடைய பொக்கிஷமாக, சொத்தாக இருந்து நம்மை ஆசீர்வதித்து நடத்துவார். போகட்டும் எப்படி புதிதாக்குகிறார், பழைமையாய் போகாமல் எப்படி நடத்துகிறார் என்பதைப் பார்க்கப் போகிறோம்.

# புதிய வஸ்திரம்

**இந்த நாற்பது வருஷம் உன் மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உன் கால் வீங்கவும் இல்லை என்று உபா 8:4-ல் சொல்லப்பட்டுள்ளது. உபா 29:5-ல் கர்த்தராகிய நான் உங்கள் தேவன் என்று நீங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு, நான் நாற்பது வருஷம் உங்களை வனாந்தரத்தில் நடத்தினேன். உங்கள் மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உங்கள் காலிலிருந்த பாதரட்சைகள் பழையதாய்ப் போகவும் இல்லை, நீங்கள் அப்பம் சாப்பிடவும் இல்லை, திராட்சரசமும், மதுவும் குடிக்கவும் இல்லை என்றார்.** 430 ஆண்டுகள் எகிப்திலே பார்வோனால் நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டு, வேதனைப்பட்ட அந்த ஜனங்களை ஆண்டவராகிய தேவன் கிருபையாய் இரங்கி மீட்டார், விடுதலை யாக்கினார். அப்படி விடுதலையாக்கின போது அந்த அடிமைத்தன தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி பாலும் தேனும் பொழியும் தேசத்திற்கு அவர்களை கொண்டு போனார். அப்படிக் கொண்டு போகையில் தேவன் அவர்களை அற்புதமாய், ஆச்சரியமாய் நடத்தினார்.

இது ஒருநாள், இரண்டுநாள் பிரயாணம் அல்ல நாற்பது வருஷம். அப்படி நாற்பது வருஷம் அவர்களை வழிநடத்தின போது தான், தேவன் செய்த அற்புதங்களை நாம் வேதத்தில் வாசிக்கிறோம்.

அவர்கள் போட்டிருந்த, அணிந்திருந்த அந்த வஸ்திரம், ஆடை பழையதாய்ப் போகவுமில்லை, கிழிந்து போகவுமில்லை, செருப்புகள் தேய்ந்து போகவுமில்லை, அறுந்து போகவுமில்லை என்று தேவனுடைய அற்புதத்தைப் பற்றி வேதம் சொல்லுகிறது. காரணம் என்ன? ஆண்டவராகிய தேவன் மோசே என்ற தேவ மனிதனை ஊழியத்திற்கு அழைத்த போது ஒவ்வொரு நாளும் அதிகாலையில் நீ,
ஆயத்தமாகி சீனாய் மலையில் காலமே என் சமுகத்தில் நில் என்றார். அப்படி மோசே நிற்கும் போது, ஜெபிக்கும் போது அவர் தேவனுடைய சாயலைப் பார்த்தார். அவருடைய முகம் பிரகாசித்துக் கொண்டிருந்தது என்று வேதம் சொல்லுகிறது. **புல 3:23-ல் அவைகள் காலைதோறும் புதியவைகள். ஆம் தேவனுடைய கிருபை காலைதோறும் புதியவைகளாய் இருந்தபடியால், அவர்கள் அனுதினமும் தேவசமுகத்தில் ஜெபித்தபோது, பாளையம் இறங்கின போது தெய்வீக பிரசன்னமும், வல்லமையும் இறங்கினது. அவர்கள் ஜெபிக்க ஜெபிக்க தேவனுடைய வல்லமை அந்த பாளையத்தில் உள்ளவர்கள் மேலும் இறங்கினது. அப்படி இறங்கின போது, அவர்கள் உடைகள் மேல் இறங்கியது, அது**



பழையதாய்ப் போகவுமில்லை, இத்துப் போகவுமில்லை, அழுக்கு அடையவுமில்லை. தேவ வல்லமை அவர்களை மூடியிருந்தது.

வேதம் சொல்லுகிறது **பிர 9:8-ல் உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும், உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக** என்று சொல்லப்பட்டுள்ளது. ஆம் நம்முடைய வஸ்திரம் எப்பொழுதும் வெண்மையாகவும், அழுக்குப்படாததாயும் இருக்க வேண்டும். இயேசு அப்படித்தான் நமக்கு முன்மாதிரியை வைத்துப் போனார். **மத் 17:2-ல் அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் முகம் சூரியனைப் போல பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப் போல் வெண்மையாயிற்று** என்று சொல்லப்பட்டுள்ளது. ஆம் அவருடைய முகமும், அவருடைய வஸ்திரமும் பிரகாசித்தது அதுதான் தேவனுடைய மகிமை. உண்மையிலே மனிதன் பாவம் செய்வதற்கு முன்பு அவனுக்கு வஸ்திரம், உடை தேவைப்படவில்லை. கர்த்தருடைய மகிமையே அவர்களை மூடியிருந்தது. அதனால் தான் அவர்கள் போட்டிருந்த ஆடை, வஸ்திரம் பழையதாய்ப் போகவுமில்லை, அழுக்கு அடையவுமில்லை புதிய வஸ்திரமாக இருந்தது. ஆகவே தான் ஆண்டவராகிய தேவன் வேதத்தில் நமக்கு ஆலோசனையாகச் சொல்லுகிறார் **வெளி 3:18-ல் நான், நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக் கொள்ளவும், நீ பார்வையடையும் படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனைச் சொல்லுகிறேன் என்றார்**



ஆம் நாம் அழுக்குப்படிந்த ஆடைகளாகவோ, பழையதாய்ப் போன ஆடையாகவோ, வஸ்திரமில்லாத, கிழிந்தவர்களாகவோ காணப்படக்கூடாது. அவருக்கு முன்பாக கறையற்றவர்களாக, மாசற்றவர்களாக காணப்பட வேண்டும். இதைத்தான் ஆண்டவராகிய தேவன் ஆசாரியனாகிய யோசுவாவுக்கு செய்தார். **சகரியா 3:3,4-ல் யோசுவாவோவெனில் அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய், தூதனுக்கு முன்பாக நின்றிருந்தான். அவர் தமக்கு முன்பாக நிற்கிறவர்களை நோக்கி, இவன் மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களைக் களைந்து போடுங்கள் என்றார். பின்பு அவனை நோக்கி பார், நான் உன் அக்கிரம-த்தை உன்னிலிருந்து நீங்கச் செய்து, உனக்கு சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன் என்றார்.** பழையவைகளை அப்புறப்படுத்தி, புதியவைகளை தரிப்பித்தார். அதனால் அழுக்கு அடையவுமில்லை பழையதாய்ப் போகவுமில்லை, கிழிந்து போகவுமில்லை, எல்லாம் புதிதாயின.

இதைத்தான் ஆண்டவராகிய தேவன் கெட்ட குமாரனுக்கும் செய்தார். அவன் பாவ வாழ்க்கையில் விழுந்து எல்லாவற்றையும் இழந்த போது, திரும்பி வந்தபோது ஆண்டவராகிய தேவன் புதிய வஸ்திரம் கொடுத்தார். **லூக் 15:22-ல் அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி, நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும், கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள் என்றார்.** அழுக்குப்படிந்த, கறைபட்ட பழையதாய்ப் போன வஸ்திரத்தை தேவன், புதிய வஸ்திரமாக மாற்றி அவனுக்கு புதிய வாழ்வு கொடுத்தார். அந்த தேவன் தான் இஸ்ரவேல் தரத்தில்



நடத்தி அற்புதமாய், ஆச்சரியமாய் பாதுகாத்து நடத்தினார். அவர்கள் போட்டிருந்த ஆடைகள், வஸ்திரங்கள் பழையதாய்ப் போகாதபடிக்கு ஆச்சரியமாய் நடத்தினார். அந்த தேவன் இன்றைக்கு பழையதாய்ப் போகாத வஸ்திரங்களாலும், கிழிந்து போகாத துருத்திகளாலும், பரலோகப் பொக்கிஷங்களாலும் உங்களை நிரப்பி ஆசீர்வதித்து, அற்புதமாய் நடத்துவார், குறைகளை நிறைவாக்குவார்.

## புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறார்.

**என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்பைப் போல் உயர்த்துவீர், புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன் என்று சங் 92:10-ல்** சொல்லப்பட்டுள்ளது. தாவீதுக்கு நாளுக்கு நாள் புதிய அபிஷேகம், புதிய ஆவியானவர், தேவனுடைய புதிய திட்டம், தேவனுடைய புதிய வெளிப்பாடு, புதிய ஆவி அவர் மேல் இறங்கியது. எதற்காக புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட வேண்டும். நாம் பழைய ஜெபத்தை அதாவது, மாம்சத்தில் ஏறெடுக்கிற ஜெபத்தை ஏறெடுக்கக் கூடாது. மாம்ச வாழ்க்கை, மாம்சத்தில் முடிவுபண்ணி, ஊழியம் செய்வது அல்ல, நாம் புதிய ஆவியை அனுதினமும் பெற்று, பரிசுத்த ஆவியினால் புதிய பாஷைகளையும், புதிய பெலத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நாம் சிறுபிள்ளைகளாக இருந்தபோது என்ன பேசினமோ அதேபோல இப்போது பேசுவதில்லை. வயது வளர்ச்சி அடைய அடைய நாம் தெளிவாக, விசுவாசமாக பேசுகிறோம். நாம் பழைய ஜெபத்தை செய்யக்கூடாது, ஜெபம் பழையதாய்ப் போகக்கூடாது, விசுவாசம் பழையதாய்ப் போகக்கூடாது. ஒவ்வொரு நாளும் ஜெபிக்கும் போதும், தியானிக்கும் போதும் நாம் புதுப் புது வெளிப்பாடுகளைப் பெற வேண்டும், வேதத்தை தியானிக்க வேண்டும். அதற்குத்தான் ஆண்டவராகிய தேவன் தாவீதைப் புதிய எண்ணெயால் அபிஷேகம் பண்ணினார். அப்படி புதிய எண்ணெயால் அபிஷேகம் பண்ணும்போது தான் புதிய ஆவி, புதிய இருதயம் மனிதனுக்குள் உண்டாகி புதியவர்களாக, தேவனுடையவர்களாக மாறுகிறார்கள். அப்படிப்பட்ட மனிதர்கள் தான் புது மனம் உள்ளவர்களாக மாறுகிறார்கள்.

இதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் **ரோமர் 12:2-ல் நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகுகிறதினால் மறுரூபமாகுங்கள் என்றார்** இப்படி மனம் புதிதாகும் போது தான் புது திராட்சரசத்தை, புது துருத்திகளில் வார்த்து

வைக்க முடியும். இதிலே பழையதற்கு, மாம்சத்திற்கு வேலை கிடையாது. இப்படி யார் எல்லாம் புதிய அபிஷேகத்தைப் பெற்றார்களோ, அவர்கள் எல்லாம் **கொலோ 3:10-ல் தன்னைச்சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே என்றார்.** அப்படி புதிய மனிதனை, புதிய ஆவியைத் தரித்துக் கொண்ட ஒவ்வொருவரும் தான் வாக்களிக்கப்பட்ட கானானுக்குள் புது உடன்படிக்கையின் இரத்தத்தால் கழுவப்பட்டு, புதிய வானம், புதிய பூமியை நோக்கி, எகிப்தை விட்டு, பாவ அடிமைத்தனத்தை விட்டு, வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் போனார்கள். நாம் பழையவர்களாய், முறுமுறுக்கிறவர்களாய் தேவனைப் பகைக்கிறவர்களாய் இருந்தால் இந்த புதிய தேசத்திற்குள் போக முடியாது. அதனால் தான் தேவன் நமக்கு புதிய கிருபை, புதிய ஆவி, புதிய அபிஷேகம் இவைகளால் நம்மை நிரப்பி பழையவர்களாய்ப் போகாதபடி, பழைய மன்னாவை, எகிப்திலே சாப்பிட்ட கொம்மட்டிக் காய்களை சாப்பிடாதபடிக்கு புதிய மன்னாவை அனுதினமும் அவர்களுக்குப் பொழிந்தருளினார். அந்த மன்னாவைப் புசித்தவர்களுக்கு பெலவீனம் இல்லை, வியாதி இல்லை, பிரயாணத்தில் களைப்பு இல்லை, புது பெலனோடு புறப்பட்டுப் போனார்கள்.

இன்றைக்கு அந்த மன்னாவை, நாம் வேதத்தைத் திறந்து வாசிக்கும் போது நமக்குக் கொடுக்கப்படுகிறது. நாம் அதை தியானிக்கும் போது, உட்கொள்ளும் போது தேவன் நம்மை புதிய ஜீவனுள்ளவர்களாக மாற்றுகிறார். ஆம் நாம் ஒரு நாளும் மனிதனுடைய சட்டதிட்டங்களாகிய கட்டளைகளுக்கு அடிமையாகாமல் புதியவர்களாக, தேவன் நம்மை பரம கானானுக்குள் கொண்டு போகிறார். இதைச் செய்யத்தான், இதை சிலுவையில் நிறைவேற்றத் தான் இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்து, புதிய வழியை ஜெபத்திலே, ஊழியத்திலே ஏற்படுத்தினார். **எபி 10:19,20-ல் ஆகையால் சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு**



**பண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு, அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது என்றார். ஆகவே நாம் புதிய ஆவியுள்ளவர்களாகி** புதிய எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட்டு பழையவர்களாக, பழைய ஏற்பாட்டின் காரியத்தைச் செய்யாதபடிக்கு, புதியவர்களாக, கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டவர்களாக வாழ நம்மை அர்ப்பணிப்போம். இதைத்தான் ஆண்டவராகிய இயேசு லூக் 12:33,34-ல் சொன்னார் பழையதாய்ப் போகாத இருதயங்களும், பழையதாய்ப் போகாத ஜெபங்களும், பழையதாய்ப் போகாதப் பணப்பைகளும், பழையதாய்ப் போகாத விசுவாசமும், பழையதாய்ப் போகாத பரிசுத்தமும் நமக்கு உண்டாக வேண்டும் என்றார். தொடர்ந்து நாம் வேதத்தை வாசித்துப் பார்த்தால் பழைய ஏற்பாட்டின் ஊழியம் அல்ல, புதிய ஊழியம் செய்ய தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

## பழைய ஏற்பாட்டின் ஊழியம் அல்ல புதிய ஏற்பாட்டின் ஊழியம்

ஒழிந்து போகிற மகிமையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாய் இருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு மகிமையுள்ளதாய் இருக்கும் என்றார். பழைய ஏற்பாட்டின் ஊழியம் ஆசாரிய ஊழியம், மனிதன் செய்யும் தவறுகள், பாவங்கள், தண்டனைகள் இவைகளுக்காக



தேவசமுகத்தில் பரிந்து பேசுகிறது. அப்படிப் பரிந்து பேசி தண்டனைக்குத் தப்பலாம் அல்லது பலி செலுத்தி இரக்கத்தைப் பெறலாம் என்று அதை மட்டும் தான் செய்தார்கள். இதனால் பாவம் குறையவோ, தீமை செய்யாதவர்களோ இல்லை, ஜனங்களுக்கு, யாவருக்கும் மனம் மாற்றம் ஏற்படவும் இல்லை. அது ஒழிந்து போகிற ஊழியம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார். ஒழிந்து போகிற, அழிந்து போகின்ற. காணாமற்ப்போகிற ஊழியத்தை நாம் செய்யக் கூடாது. கொஞ்ச நாள் பிரகாசித்து விட்டு பிறகு காணாமற் போவது அல்ல நித்தியமான ஊழியம், நிலையான ஊழியம், மகிமையுள்ள ஊழியம், இந்த புதிய ஊழியத்தைச் செய்ய தான் ஆண்டவராகிய இயேசு இந்தப் பூமிக்கு இறங்கி வந்தார். பழையன ஒழியட்டும், புதியன உண்டாகட்டும் மனம் திரும்புங்கள் என்றார். பொல்லாத வழிகளை விடுங்கள் என்றார். சுயபெலத்திலே, சுய பக்தியிலே, சடங்காச்சாரத்தினாலே நாம் மீட்கப்பட, இரட்சிக்கப்பட முடியாது. நம்முடைய கிரியைகளை மாற்றுகிறவர் ஆவியானவர் என்று அந்த ஆவியானவரைப் பெறவும், அவரால் இயக்கப்படவும், நடத்தப்படவும் தேவன் இயேசு விரும்பினார். **லூக் 12:49 பூமியிலே அக்கினியைப் போட வந்தேன் அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டும் என்றார்.** ஒவ்வொருவரும் எரிந்து பிரகாசிக்க வேண்டும் என்றார். அந்த ஆவியானவர் வந்தால் தான் சகல சத்தியத்திற்குள்ளும், நிறைவை நோக்கி நடத்துவார் என்றார். அந்த ஆவியானவருடைய கிரியைகள் அன்பு, அமைதி, சந்தோஷம், இச்சையடக்கம் இவைகளில் நிறையும் போது தேவனுடைய வல்லமை, கிரியைகள் நமக்குள் பெருகும். அப்பொழுது நாம் தேவனுடைய காரியங்களை, கிரியைகளை நடத்தலாம் என்றார். ஆகவே இயேசு சொன்னார். **மாற்கு 16:17-ல் என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள், சர்ப்பங்களை எடுப்பார்கள் சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது.** வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள். இது தான் மகிமையுள்ள ஆவியானவருடைய ஊழியம். புதிய ஊழியம், புதிய ஏற்பாட்டின் ஊழியம், இந்த ஊழியத்தை, மகிமையுள்ள ஊழியத்தைச் செய்ய தேவன் நம்மை அழைத்திருக்கிறார். இது தான் புதிய ஏற்பாட்டின் ஊழியம், மகிமையுள்ள ஊழியம், இதைச் செய்வதை விட்டு விட்டு மாம்சத்திலும், மனதிலும் முடிவு செய்து ஒழிந்து போகின்ற ஊழியத்தை நாம் செய்யக்கூடாது. இயேசுவின் ஊழியத்தை நாம் செய்ய வேண்டும், அதற்குத்தான் தேவன் நம்மை அழைத்திருக்கிறார். இது தான் புதியது, புதிய வானம், புதிய பூமிக்கு நாம் போக வேண்டும். ஆகவே புதிய ஆவியுள்ளவர்களாய் **எபே 4:23,24-ல் பவுல் சொல்லுகிறார் உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள் என்றார்.** ஆம் புதிய ஆவியுள்ளவர்களாகி, புதிய தரிசனத்தோடு, புதிய பெலத்தோடு, புதிய ஊழியத்தை, தேவனுடைய திட்டத்தோடு, தரிசனத்தோடு, சித்தத்தோடு, அவருடைய மகிமையான ஊழியத்தை நாம் செய்ய வேண்டும். இது தான் மகிமையுள்ள புதிய ஏற்பாட்டின் ஊழியம். ஆவியானவருடைய ஊழியம். இது தான் பழையதாய்ப் போகாத வாழ்க்கையை, ஜெப ஜீவியத்தை நமக்குத் தந்து நம்மை ஆசீர்வதித்து நடத்தும். இந்த மகிமையான, மேன்மையான ஊழியத்திற்குத் தான் தேவன் நம்மை அழைத்திருக்கிறார். இது தான் புதிய ஊழியம், பழையவைகள் ஒழிந்து புதியவைகள் தோன்றட்டும். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களைப் புதிய ஆவியுள்ளவர்களாக்கி, புதிய ஊழியத்தைச் செய்ய உங்களுக்கு கிருபை செய்வாராக!.



# உன்னை மகிழ்ச்சியாக வைப்பேன்

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். மகிழ்ச்சியா! அப்படி என்றால் என்ன? என்று கேட்கும் அளவு இன்றைக்கு நம் வாழ்வில் போராட்டங்கள், பிரச்சனைகள், தேவைகள் நம்மை புரட்டிப் போட்டிருக்கும். இந்த நாட்களில் நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மைப் பார்த்து ஏசா 60:15-ல் நீ நெகிழப்பட்டதும், கைவிடப்பட்டதும், ஒருவரும் கடந்து நடவாததுமாயிருந்தாய், ஆனாலும் உன்னை நித்திய மாட்சிமையாகவும், தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன் என்று சொல்கிறார். நம்ப முடிகிறதா? நம்முடைய கடந்த வாழ்க்கை எப்படி இருந்தது என்றும், இனி எப்படி இருக்கும் என்பதைப் பற்றியும் ஆண்டவர் நமக்குச் சொல்லுகிறார். நம் வாழ்க்கை இதுவரை மோசமானதாகத்தான் இருக்கிறது, மற்றவர்களால் கைவிப்பட்டதும், ஒருவரும் நம் வழியாய் கடந்து வர விரும்பாத நிலையிலும் தான் நாம் இருந்தோம். ஆனால் அப்படிப்பட்ட நம்மை நித்திய மாட்சிமையாகவும், தலைமுறை தலை முறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன் என்று கர்த்தர் சொல்கிறார். கடந்த ஒரு மாதமாக இந்த வார்த்தைகளை நான் வாசித்து, அறிந்து, விசுவாசித்து, சுதந்தரிக்க தேவன் கிருபை செய்து வருகிறார். **ஏசா 65:18-ல் நான் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள். இதோ, எருசலேமைக் களிகூருதலாகவும், அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன் என்று** ஆண்டவர் சொல்கிறார். வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்த கர்த்தர் அதற்கு

முன்பாக பூமியை எப்படிப் பார்த்தார். அது ஒழுங்கின்மையும், வெறுமையுமாயிருந்தது. கடலின் ஆழத்தில் இருள் இருந்தது. அப்படி இருந்த உலகத்தைத் தானே வெளிச்சமாக, மரம், செடி, கொடி நிறைந்ததாக, வெட்டாந்தரை, தண்ணீர்கள், விலங்குகள், பறவைகள், மனிதன், பெண் என்று சிருஷ்டித்து அலங்கரித்தார். அதே போல இப்போது நம் வாழ்க்கை எப்படி ஒழுங்கின்மையாக, வெறுமையாக இருந்தாலும், சீரற்று இருந்தாலும், இருள் நிறைந்து, ஒன்றுமில்லாதது போல வறண்ட நிலையில் துக்கம் நிறைந்து இருந்தாலும் தேவனாகிய கர்த்தர் நம்மை மகிழ்ச்சியாகவும், களிகூருதலாகவும் சிருஷ்டிக்கிறார். இப்போது மகிழ்ச்சி இல்லை, ஆனால் ஆண்டவரால் மகிழ்ச்சி சிருஷ்டிக்கப்படுகிறது. அவர் நம்மைப் பார்த்துச் சொல்லுகிறார் நான் சிருஷ்டிக்கிறதினால் நீங்கள் மகிழ்ந்து களிகூருங்கள். உங்களை களிகூருதலாகவும், மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன் என்கிறார்.

## மகிழ்ச்சி தான் பங்கு

சாலமோன் அநேகப் பாடல்களையும், நீதிமொழிகளையும், பிரசங்க வாக்கியங்களையும் எழுதினவன். ஒரு நாள் இந்த சந்தோஷத்தை, நகைப்பை யோசித்த போது சந்தோஷத்தினால் உன்னை சோதித்துப் பார்ப்பேன் என்று தன் உள்ளத்திலே சொல்லிக் கொண்டாராம். ஆனால் எல்லாம் மாயையாய் இருந்தது. நான் பெரிய வேலைகளைச் செய்தேன். எனக்காக வீடுகளைக்கட்டி, திராட்சைத் தோட்டங்களை நட்டு, சிங்காரவனங்களையும், கனிமரங்களையும் உண்டு பண்ணி, அதை பராமரிக்க வேலைக்காரர்கள், வேலைக்காரிகளைச் சம்பாதித்து ஆடு, மாடு, திரண்ட ஆஸ்தி, வெள்ளி, பொன் பொருள்களைச் சம்பாதித்து, சங்கீதக்காரர்கள், சங்கீதக்காரிகளை சம்பாதித்து, பெரியவனும், திரவிய சம்பனனுமானவன். அவன் ஞானம் அவனோடிருந்தது. **பிர 2:10-ல் என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடைபண்ணவில்லை. என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்கவில்லை. நான் செய்த முயற்சிகளிலெல்லாம் என் மனம் மகிழ்ச்சி கொண்டிருந்தது. இதுவே என் பிரயாசங்கள் எல்லாவற்றிலும் எனக்கு வந்த பலன்.** இவ்வளவு திரளாய் எல்லாம் இருந்தும் அவருக்கு கிடைத்த பலன் மகிழ்ச்சி மட்டுமே. **பிர 3:12-லும் மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல் வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்.** மகிழ்ச்சியாயிருப்பது தான் நன்மை வேறொன்றும் இல்லை. **பிர 3:22-ல் மனுஷன் தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருக்கும் நன்மையை யேயல்லாமல், வேறே நன்மை இல்லையென்று கண்டேன். இதுவே அவன் பங்கு என்று எழுதுகிறான்.** நம் மனித வாழ்வில் மகிழ்ச்சி மட்டுமே நம் பங்கு, பலன் என்று எல்லாவற்றையும் குறைவில்லாமல் அனுபவித்த சாலமோன் சொல்கிறார்.



# அவர் சமுகத்தில் மகிழ்ச்சி

நம் தேசத்தில் மிகச் சிறந்த இருதய சிகிச்சை நிபுணர் மருத்துவர் திரு.சொக்கலிங்கம் அவர்கள். அவர் உங்களுக்கு ஹார்ட் அட்டாக் வராமல் இருக்கனும்னா மகிழ்ச்சியாக இருங்கள் என்கிறார். அரை வயிறு சாப்பிடுங்கள் ஆயில் குறைத்தால் ஆயுளைக் கூட்டலாம். சரியான தூக்கம், ஓய்வு எடுங்கள் என்கிறார். இந்த மகிழ்ச்சி எங்கு கிடைக்கும், மனிதர்கள் நமக்கு கொடுத்து விடுவார்களா? சில நேரங்களில் மனிதர்களாலே தானே! நாம் மகிழ்ச்சியை இழக்கிறோம். நம் பணம், பொருள், புகழ், அந்தஸ்து, நமக்கு நிரந்தர மகிழ்ச்சியை கொடுக்குமா? சாலமோன் சகலத்தையும் அனுபவித்தவன் அவனைப்போல யாரும் வாழ்ந்திருக்க முடியாது. ஆனால் அவனும் மகிழ்ச்சியாய் நாம் இருக்கிறோமே அந்த நிமிஷங்கள், நேரங்கள் தான் நம் பங்கு என்று சொல்லிவிட்டான். இந்த மகிழ்ச்சி நம் ஆண்டவர் சமுகத்தில் தான் இருக்கிறது. **1 நாளா 16:27-ல் மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது, வல்லமையும், மகிழ்ச்சியும் அவர் ஸ்தலத்தில் இருக்கிறது. 26-ஆம் வசனத்தில் சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள் தானே! கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர். அவர் சமுகத்தில் மகிழ்ச்சி இருக்கிறது** என்று வாசிக்கிறோம். தாவீது தன் **சங்கீதம் 21:1-ல் கர்த்தாவே! உம்முடைய வல்லமையிலே ராஜா மகிழ்ச்சியாயிருக்கிறார், உம்முடைய இரட்சிப்பிலே எவ்வளவாய்க் களிகூருகிறார். 6 ஆம் வசனத்தில் அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர், அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர்** என்று சொல்வதை வாசிக்கிறோம். மகிழ்ச்சி நம்முடைய தேவனாகிய கர்த்தரின் சமுகத்தில் இருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, **நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாய் இருந்தேன், நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன் என்கிறார். நீதி 8:30.**

அன்னாள் குழந்தை இல்லாததின் நிமித்தம் அழுது கொண்டிருந்தாள். நிந்தை அவள் இருதயத்தைப் பிளந்தது, ஆலயத்திற்குப் போகிறவள் தான், பலிகளைச் செலுத்தி வந்தவள் தான், ஆண்டவரின் சமுகத்தில் என்றைக்குப் போய் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன் என்றாளோ, அப்போது தான் அவர் சமுகத்தின் மகிழ்ச்சி அவளை நிரப்பியது. அதற்குப் பிறகு அவள் துக்கமுகமா யிருக்கவில்லை. அற்புதத்தைப் பெற்றுக் கொண்டாள். இன்றைக்கு நாம் கூட வழக்கம் போல ஆலயத்திற்குப் போகிறோம், வழக்கம் போல ஜெபம் செய்கிறோம், ஆனால் அவர் சமுகத்தை உணருகிறோமா? அவர்



நம்மோடு பேசுவதைக் கேட்கும் தூரத்தில் நாம் இருக்கிறோமா? அவர் சமுகத்து மகிழ்ச்சி ஒவ்வொரு வினாடியும் நிரப்ப, அவர் சமுகத்தை நாம் உணர்ந்து ஜெபித்தால் மனமகிழ்ச்சியினால் நிரப்புவார். மோசேக்கு ஆண்டவர், அதனால் தான் என் சமுகம் உனக்கு முன்பாக செல்லும் என்றார். மோசேயும் உம் சமுகம் எனக்கு முன்பாக செல்லாமற்போனால், என்னை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும் என்று ஜெபித்தார். இந்த சமூகத்தின் மகிழ்ச்சியாய் நம்மை தேவன் வைக்கப் போகிறார், சிருஷ்டிக்கப் போகிறார். நாம் அப்படியே செய்தருளும் என்று நம்மை அர்ப்பணிப்போமா?.

இந்த மனமகிழ்ச்சி நாம் கர்த்தரைச் சேவிக்கத்தான் நமக்கு கொடுக்கிறார். நாம் சந்தோஷம் வரும்போது ஆண்டவரை மறந்து விடுகிறோம் அப்படி இருக்கக் கூடாது.

**உபா 28:47,48-ல் சகலமும் பரிபூரணமாயிருக்கையில் நீ மனமகிழ்ச்சி யோடும், களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவியாமற் போனதினிமித்தம், சகலமும் குறைவுபட்டு, பட்னியோடும், தாகத்தோடும், நிர்வாணம் இவைகளோடு சத்துருக்களைச் சேவித்து, மிகுந்த பாடுபடுவோம் என்று கர்த்தரின் சாபத்தில் இருக்கிறது**



இந்த சாபம் நமக்கு வேண்டாம். மனமகிழ்ச்சி பெற கர்த்தரையே சேவிப்போம். இளையமகன் தன் தவறை உணர்ந்து தகப்பனிடம் வந்தபோது, காணாமற்போன மகன், மரித்துப்போன மகன், கண்டு பிடிக்கப்பட்டு உயிர்த்ததினாலே நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாய் இருக்க வேண்டுமே என்று சொன்னான் என்று லூக் 15:32-ல் வாசிக்கிறோம். ஒரு பாவி மனந்திரும்பும் போது பெரிய மகிழ்ச்சி உண்டாகிறது. நாம் கூட ஏதோ ஒரு சிறிய தவறுக்கு இடம் அளிக்கிற போது தேவ பிரசன்னத்தை உணர முடியாமல் போகிறது. அதன் பிறகு நம்மை ஆராய்ந்து பார்த்து, நம்மை சீர்ப்படுத்தும் போது தேவனோடு உறவாட முடியும்.

## கர்த்தரில் மனமகிழ்ச்சி

மகிழ்ச்சியைத் தேடி பல பொழுதுபோக்குகளில் ஈடுபடுகிறவர்கள் ஏராளம். பீச்சுக்கு, பார்க்குக்கு, சினிமாவுக்கு, சுற்றுலா, உல்லாசமான இடங்களுக்கு, மதுபானம், போதை வஸ்துக்களுக்கும் இடம் கொடுத்து மகிழ்ச்சி நிரந்தரமானது என்று ஓடுகிறார்கள்.


சங் 37:4-ல் கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்.

ஆபகூக் 3:17,18-ல் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். எப்பொழுது? மேலே 17-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள எது இல்லாமற்போன சூழ்நிலையிலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பேன் என்கிறான். எப்படி இருக்க முடிகிறது? இவர்களால். எதுவுமே இல்லை, எல்லாமே எதிராக நடக்கிறது, சூழ்நிலைகள் தோல்வி போல் இருக்கிறது. பணப்பற்றாக்குறை பெருகி இருக்கிறது. ஆனாலும் மகிழ்ச்சியாய் இருக்கிறார்களே! என்று சுற்றி உள்ள கண்கள் ஆச்சரியமாய்ப் பார்க்கும். ஆனால் நமக்கு தான் தெரியும் நான், நாம் கர்த்தரால், கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாய் இருக்கிறோம்.

## மகிழ்ச்சி எப்படி உண்டாகிறது

**ஏசா 35:10-ல் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள். நித்திய மகிழ்ச்சி**

**அவர்கள் தலையின் மேலிருக்கும், சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள். சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.** நாம் ஆனந்த களிப்போடு கர்த்தரைப் பாடும் போது, நம்முடைய துக்கங்களை, சஞ்சலங்களை ஆண்டவர் நீக்குகிறார். நித்திய மகிழ்ச்சியை நம் தலையின் மேல் வைக்கிறார், சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். சஞ்சலமும் தவிப்பும் நம்மை விட்டு ஓடிப் போகிறது. யோசபாத் ராஜா வாழ்வில் எப்பக்கமும் எதிராளிகள் சூழ்ந்த போது கர்த்தரைத் துதியுங்கள் அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று பாடுகிற பாடகர் குழுவை, யுத்தம் செய்ய எதிர் கொள்ளுகிறவர்கள் முன்பு அனுப்பினான். அங்கு பெரிய யுத்தம் நடந்தது, எதிரிகள் தங்களுக்குள் வெட்டுண்டு மடிந்து போனார்கள். எதிரியின் பாளயத்தில் கொள்ளையிட்டு கர்த்தரை ஸ்தோத்தரித்து **2 நாளா 20:27-ல் பின்பு கர்த்தர் அவர்களை, அவர்கள் சத்துருக்கள் பேரில் களிகூரச் செய்தபடியால், யூதா மனுஷர் யாவரும் எருசலேம் ஜனங்களும், அவர்களுக்கு முன்னாலே யோசபாத்தும் மகிழ்ச்சியோடே எருசலேமுக்குத் திரும்பினார்கள்.**



கர்த்தரைப் பாடித்துதித்து, அவர்கள் சத்துருக்கள் பேரில் களிகூரச் செய்து, மகிழ்ச்சியோட அவர்களை தேவன் நடத்தினார். இன்றைக்கும் உங்கள் வாழ்வில் எப்பக்கமும் நெருக்கங்கள் சூழ்ந்துள்ளதா? பாடினால் என்ன நடக்கப் போகிறது என்று நினைக்காமல், உங்களுக்குத் தெரிந்த கிறிஸ்துவின் பாடல்களைப் பாட ஆரம்பியுங்கள். முதலாவது உங்கள் துக்கம் மாறும். புதிய நம்பிக்கையும், நீங்கள் கடந்து போகிற பாதையை எதிர்கொள்ளுகிற தைரியமும் வரும். அதனால் தான் **சங் 100:1,2-ல் பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து, ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதி முன் வாருங்கள்** என்று சங்கீதக்காரன் சொல்கிறதை வாசிக்கிறோம். யோசபாத் துதித்தது மட்டுமல்ல பயம் அவனைச் சூழும்போது எங்கள் தேவனே, எதிர் நிற்க எங்களுக்குப் பெலன் இல்லை, என்ன செய்வது என்று தெரியவில்லை. எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது என்று ஜெபித்தான். நம்முடைய கவலைகளை, பாரங்களை, பயங்களை, எதிர்பார்ப்பு, ஏக்கங்களை ஆண்டவரிடம் சொல்லி, உதவியை நாடி நாம் ஜெபிக்கிற போது கர்த்தர் இக்கட்டுகளில் நமக்குப் பெலனையும், தைரியத்தையும் தருகிறார்

யோசபாத் திடப்படுத்தப்பட்டு, மற்ற ஜனங்களையும் திடப்படுத்துகிறான். எவ்வளவு கொடிய பாதையில் நீங்கள் கடந்து போனாலும் அதை மனம் விட்டு ஆண்டவரிடம் பேசுங்கள், ஜெபியுங்கள். அந்த நேரத்தில் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்றும், எப்படி இதை கடக்கப் போகிறீர்கள் என்றும் கலங்குகிற காரியத்தை கடந்து போக கர்த்தர் உதவி செய்வார். **சங் 86:4-ல் உமது அடியேனுடைய ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும், ஆண்டவரே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்** என்று ஜெபிக்கிற சங்கீதக்காரனின் ஜெபத்தைப் போல, தேவனே என் ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும் என்று ஜெபியுங்கள். உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல எல்லாவற்றிலும் நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். மோசே **சங் 90:15-ல் தேவரீர், எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்** என்று ஜெபிக்கிறான். நாம் அப்படி ஜெபிக்கிற போது ஆண்டவர் இயேசு மனம் இரங்குவார்.



நம் சிறையிருப்பு, சிறுமைகள் மாறும். எஸ்தரின் வாழ்க்கையில் அவள் இனமே அழியும்படி பொல்லாத ஆமான் திட்டமிட்ட போது ராஜாவினிடத்திலும், தேவசமுகத்திலும் விழுந்து ஜெபித்த போது அவளுடைய சிறுமை மாறியதே **எஸ் 8:16-ல் யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும், கனமும் உண்டாயிற்று என்று பார்க்கிறோம்.**

**சங் 14:7-ல் சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக! கர்த்தர் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும் போது யாக்கோபுக்கு களிப்பும், இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்.** ஜெபம் நம்முடைய சிறையிருப்பை மாற்றும், சிறுமைகளை மாற்றி தேவன் நம்மை மகிழ்ச்சியாக்குவார்.

**சங் 119:174-ல் கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்பின் மேல் ஆவலாயிருக்கிறேன், உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி.**

தாவீது தேவனுடைய பெட்டி ஓபேத்ஏதோம் வீட்டில் இருந்த போது தேவன் அவனையும், அவன் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் என்று அறிந்து, அதை தாவீதின் நகரத்திற்கு மகிழ்ச்சியுடனே கொண்டு வந்தான் என்று 2 சாமு 6:12-ல் வாசிக்கிறோம். வேதவசனத்தை யார் நம் வீட்டில், உள்ளத்தில் கொண்டு வருகிறோமோ அவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும். இது தான் எவ்வளவு உபத்திரவங்கள் நடுவிலேயும் நம்மை அவரில் மகிழ்ச்சியடையப் பண்ணுகிறது.

**இன்னும் ரோமர் 14:17-ல் தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்தஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.** ஆவியின் நிறைவானது மகிழ்ச்சியைத் தரும். அத்தனை பாடுகள் நிறைந்த தாவீது **சங் 30:11-ல் என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப் பண்ணினீர், என் இரட்டைக் களைந்து போட்டு மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்** என்கிறான் நம்மையும் மகிழ்ச்சியினால் இடைகட்ட தேவன் விரும்புகிறார். இதுவரை நீங்கள் புலம்பிய எல்லாவற்றையும் ஆனந்தக் களிப்பாய் மாற்றி உங்களை மகிழ்ச்சியாய் சிருஷ்டித்து வாழ வைப்பாராக!

**ஏசாயா 51:3-ல் கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார், அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச் செய்து அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்திர வெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார். சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும்** என்ற வார்த்தையின்படியே பாழானதைத் தேற்றி, வனாந்தரத்தை ஏதேனைப் போலவும், அவாந்திர வெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப் போல சிருஷ்டிப்பாராக!



# எழும்பிப் பிரகாசிக்க என்ன செய்ய வேண்டும்

**சகோதரி. பிரேமாடேவிட்**

எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும். ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார், அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். ஏசாயா 60:1,2

நம்மைப் பிரகாசிப்பிக்கும் நித்திய வெளிச்சமாயிருக்கிற மெய்யான ஒளியாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உலகில் உள்ள எல்லாரையும், தாழ்விலே கிடக்கிற யாராயிருந்தாலும், எந்த மனிதனின் வாழ்க்கையையும் பிரகாசிப்பிக்கும் மெய்யான ஒளி இயேசு ஒருவரே என்றும், இயேசுவை ஒளியாக ஏற்றுக்கொண்டவர்கள் மங்கிஎரியும் திரியைப் போலிருந்தால், அவர்களைச் சீர்ப்படுத்தி மறுபடியும் எரிந்து பிரகாசிக்க செய்கிறார் என்றும், யோவான்ஸ்நானகனைப் போல் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருங்கள் என்றும் கடந்த மாதத்தில் பார்த்தோம்.இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறபடியினால் எங்கும் இருளும், காரிருளும், பிரச்சனைகளும், போராட்டங்களும் சூழ்கிறதைப் பார்க்கிறோம். ஜனவரி மாதம் துவங்கும் போதே நிலநடுக்கம், சுனாமி, எங்கு பார்த்தாலும் வெள்ளம், ஒவ்வொரு குடும்பத்தின் நடுவிலும் பல பிரச்சனைகள். ஒவ்வொருவரின் மனமும் பயத்திலும், பதட்டத்திலும் என்ன செய்வோம் என்று திகைத்திருக்கிறது. இந்த சூழ்நிலையில் ஆண்டவர் சொல்லுகிறார் ஒளியாகிய கிறிஸ்து உங்கள் மேல் உதித்துவிட்டபடியினால், கிறிஸ்து உங்களுக்குள் இருப்பதால் இருளோ, காரிருளோ உங்களை அணுகுவதில்லை, சேதப்படுத்துவதில்லை. அவர் தீபம் என் தலையின் மேல் பிரகாசித்தது, அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்து போனேன். தேவனுடைய இரகசியச் செயல்கள் என் கூடாரத்தின் மேல் இருந்தது. யோபு 29:3,4. தன் பிள்ளைகள், தன் உடைமைகள் அனைத்தையும் ஒரே நாளில் இழந்து, வாழ்க்கையே இருளாய்ப் போன யோபு சொல்லுகிறார், அவர் என் ஒளியாக, வெளிச்சமாக இருப்பதால் நான் ஈஸியாக இருளைக் கடந்து போவேன் என்றார்.

பிரகாசமுள்ள எதிர்காலம்



அவருக்குக் கிடைத்தது, இழந்ததையெல்லாம் இரண்டு மடங்காய்ப் பெற்றுக்கொண்டார். சுற்றிலும் இருளாயிருந்தாலும் நீங்கள் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருப்பீர்கள். நீதி 4:18. பிரகாசிக்க முடியும் என்ற நம்பிக்கை என்னும் ஒளியை உங்களுக்குத் தருகிறார். இந்த ஆண்டிலும், இனிவரும் காலங்களிலும் எழும்பிப் பிரகாசிக்க வேண்டும் என்று தனது சித்தமாக, திட்டமாக மாத்திரமல்ல பிரகாசிப்பதே உங்கள் நோக்கமாக, விருப்பமாக மாற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். விளக்கை ஏத்தியாச்சு இனி நீங்கள் பிரகாசிப்பதற்கான வேளை, Turn வந்துவிட்டது.

## இனிப்பாவம் செய்யாதே, என்னைப் பின்பற்று

**இயேசு அவளை நோக்கி நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்போகிறதில்லை, நீ போ, இனிப்பாவம் செய்யாதே. நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்னைப் பின்பற்றுகிறவன், இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்.**
**யோவான் 8:10,11.** ஒழுக்கம் தவறின பெண்ணை கையும், மெய்யுமாகப் பிடித்து இயேசுவிடம் கொண்டு வந்தார்கள். இவளைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று மோசே கட்டளையிட்டிருக்கிறார், நீர் என்ன சொல்லுகிறீர் என்று இயேசுவைக் குற்றம் கண்டுபிடிக்கும்படி அவரிடம் கேட்டார்கள். இயேசுவோ குனிந்து விரலினால் தரையிலே எழுதினார். அவர்கள் ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்த போது, உங்களில் பாவமில்லாதவன் எவனோ? அவன், இவள் மீது முதல் கல்லெறியக்கடவன் என்றார். மறுபடியும் தரையிலே எழுதினார். தாங்களும் பாவம் செய்திருக்கிறோமே என்ற உணர்வு, அவர்கள் கையிலிருந்த கல்லைகீழே போடச் செய்தது. ஒருவன் பின் ஒருவராக எல்லாரும் சென்று விட்டனர். அந்த பெண் மாத்திரம் பயத்தோடும், அவமானத்தோடும் நின்று கொண்டிருந்தால், இயேசு அவளைப் பார்த்து எங்கே அவர்கள்? நானும் உன்னைத் தண்டிக்கப் போகிறதில்லை, நான் தான் உனக்குப் பதிலாக மரிக்கப் போகிறேனே, நீ ஏன் சாக வேண்டும்? உன்னைப் பாவத்திலிருந்தும், தண்டனையிலிருந்தும், இருளுக்கு அதிபதியாகிய சாத்தானிடமிருந்தும் காப்பாற்ற வந்த இரட்சகர் நான் தான், உனக்கு இன்று விடுதலை, நீ போ ஆனால் இனிப் பாவஞ்செய்யாதே இருளில் நடக்காதே ஒளியைப் பின்பற்று என்றார்

சத்தியம் அவளை விடுதலையாக்கியது, குமாரன் அவளை விடுதலையாக்கினார். நிறைவான கிறிஸ்து அன்று அவள் உள்ளத்தில் வந்ததினால், குறைகள், அவள் பாவம் மன்னிக்கப்பட்டது. அவள் விரும்பியோ, மற்றவர்களால் கட்டாயப்படுத்தப்பட்டோ, மற்றவர்களின் சூழ்ச்சியினாலோ பாவ இருளிலிருந்த, மரணத்தின் திசையிலே குடியிருந்த அவள் மேல் வெளிச்சம் பிரகாசித்தது. இனி அவள் வாழ்க்கை இருண்டிருப்பதில்லை. அந்தப் பாவ இன்பம், அதினால் வந்த லாபம், நட்பு ஒன்றும் எனக்கு வேண்டாம். இயேசு எனக்குப் போதும், இனி இருட்டான அந்தப் பாதையில நடக்க மாட்டேன் என்று தன் வாழ்க்கையை, தன் உள்ளத்தை, உடலை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்திருப்பாள். என்னைப் பின்பற்றி வா, இனிப் பாவம் செய்யாதே என்ற அவருக்காக நன்றியோடும், அன்போடும் அவரைப் பின்பற்றி இருப்பாள், பிரகாசித்திருப்பாள். நிச்சயம் இயேசுவை பின்பற்றி ஊழியம் செய்த பெண்களில் இவளும் ஒருவராக இருந்திருப்பாள். அவளைப் பார்த்த அநேகர் இயேசுவிடம் வந்திருப்பார்கள். நம் வாழ்க்கை மட்டுமல்ல நம் கண்ணும் சரீரத்தின் விளக்காயிருக்கிறது. கண் தெளிவாயிருக்க வேண்டும், அப்படியிருந்தால் வாழ்க்கை, சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். கண்களின் இச்சைக்கு, மாமசத்தின் இச்சைக்கு மீண்டு வரமுடியாதபடி, நம்மை பாவ இருளுக்குள் தள்ளிவிடும், கொஞ்ச நேரந்தானே, ஒன்று தானே, சும்மா கூடத்தானே போனேன் என்று இயற்கைக்கு மாறான, தேவனுக்கும் பெற்றோருக்கும் தேசத்துக்கும் எதிரான

பாவங்களில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். பாவத்தை வெறுத்துத் தள்ளி, தீமைக்கு எதிர்ப்புக் குரல் எழுப்பி, அவரைப் பின்பற்றி பிரகாசிக்க உங்களை ஒப்புக்கொடுப்பீர்களா?. எல்லாரும் ஒளியைப் பார்க்கிலும் இருளையே விரும்பி ஒளியைப் பகைக்கிறார்கள். தாங்கள் கண்டிக்கப்படுவோம் என்பதினாலேயே நிறைய பேர் ஒளியினிடம் வராதிருக்கிறார்கள். இயேசுவை, போதனைகளைப் பிடிக்கிறது இல்லை. அங்கே போன சினிமா,சீரியல், செல்போன்-ல நம்ம விரும்புகிறபடி இருக்க முடியாதே என்று பலர் இருளிலே இன்னும் நின்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு சிலரோ இயேசுவைப் பின்பற்றி அவருக்காக வாழ வேண்டும் என்று ஒளியினிடம் விரும்பி வருகிறார்கள். அப்படி வருகிறவர்களைத் தான் பிரகாசிக்கச் செய்து கொண்டிருக்கிறார்.

கிறிஸ்தவ வாலிபன் இயேசுவை நேசிப்பதற்குப் பதில் ஒரு பெண்ணை நேசித்தான். கிறிஸ்துவுக்கும் அவனுக்கும் சம்பந்தமில்லாத ஒரு வாழ்க்கை. பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணமே இருந்தது. கடமைக்காக பைபிள் படிப்பது, சர்ச்சுக்கு போறது, இசை வாசிப்பது என்றிருந்தான். ஒருநாள் அவன் நேசித்த அந்தப் பெண் வேறு ஒருவனோடு பேச ஆரம்பித்து விட்டாள், அப்ப நானும் வேறு ஒருத்தியோடு பேசுகிறேன் என்ற போட்டியான வார்த்தைகளைச் சொல்லி வேறு ஒரு பெண்ணோடு விளையாட்டாகப் பேசினது, போலீஸ் புகார் கொடுக்கப்பட்டு புழல் ஜெயிலுக்கு போக வேண்டியதாயிற்று. இந்த பெண்ணோடு தவறான பழக்கமே இல்லையே ஏன்? எனக்கு இப்படி நடந்தது என்று கோபத்தோடும், வேதனையோடும் இருந்த போதும் ஒரு நாளும் அவன் இயேசுவைக் கூப்பிடவில்லை, ஏதோ ஒரு சத்தம் நீ செத்துப்போ....என்று அவனுக்குள்ளே சொல்லிக் கொண்டிருந்தது. மிக உயரமான சுவற்றிற்குள்ளே சில வேலைகளைச் செய்யச் சொல்லும் போது எப்படியாவது சாக வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது, இவனையறியாமலே இயேசுவே என்னைக் காப்பாத்துங்க என்று கத்தியிருக்கிறான். அதற்குப்பிறகு செத்துப் போ என்ற சத்தம் கேட்கவில்லை. மனதிலே ஒரு அமைதி, சமாதானம் வந்திருக்கிறது.



அந்த தற்கொலை ஆவி, மரண இருள் அவனை விட்டு விலகினது. அதுக்கு முன்னால் ஆண்டவர் தன்னோடு தனிப்பட்டவிதமாக பேசினதில்லை, அப்பொழுது ஆண்டவர், நீ என்னைப் பின்பற்றி ஊழியம் செய்ய வேண்டும், உன் எதிர்காலம் எப்படியிருக்கும் என்றெல்லாம் பேசத் தொடங்கினார். பத்தே நாளில் வெளியில் வந்தான். இப்பொழுது ஆண்டவருக்காக அநேகரை இருளிலிருந்து வெளிச்சத்தில் கொண்டு வரக்கூடிய ஊழியத்தைச் செய்து இயேசப்பாவுக்காக பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். உங்கள் உள்ளத்தில் ஆண்டவருக்கு இடம் கொடுங்கள், இருள் வேண்டாம், ஒளியை நேசித்து, தொடர்ந்து அவருடைய வழியில் நடந்து வாருங்கள். சில எதிர்ப்புகள், ஏளனங்கள் வரலாம், ஆனால் உங்களைப் பிரகாசிப்பிக்கிற இயேசு உங்களைப் பெலப்படுத்துவார். நீங்கள் செய்வதையெல்லாம் அவர் தாமே வாய்க்கச் செய்வார். எல்லா இடத்திலும் உங்களைப் பிரகாசிப்பிக்கச் செய்வாராக!.

# பயப்படாதே! பாடித்துதி

ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!

பிரபு, பாட்டி வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்று வந்தான். பள்ளிக்கு செல்லும் வழியில் சில பையன்கள் இவனைப் பார்த்ததும் கேலிபண்ணி சிரிப்பதும், டேய், வாடா என்று அதட்டுவதுமாக இருந்தார்கள். இவனோ பேசாமல் போய்விடுவான். இப்படி இரண்டு மாதம் போய்விட்டது. இருந்தாலும், இவனுக்கு ஸ்கூலுக்குப் போறது கஷ்டமாகவே இருந்தது, கொஞ்சம் பயமாகவே இருந்தது. அதினால பாட்டியிடம் சொல்லி விடுவோம்னு நினைச்சு, அவன் பாட்டியிடம் போய் நடந்த எல்ல-ாவற்றையும் சொன்னான். அப்ப பாட்டி அவனைப் பார்த்து பிரபு, பயப்படாதே! பாடித்துதின்னு சொன்னாங்க, அதற்கு பிரபு என்ன பாட்டி நீங்க, ஸ்கூலுக்குப் போகாம நான் இங்கேயிருந்து பாட்டுப்பாடவா என்று வேகமாக, கோபமாகப் பேசினான். பாட்டி சொன்னாங்க, தம்பி பிரபு, இங்கே வா, யோசபாத்துன்னு ஒரு ராஜா இருந்தாரு, அவர் ஆண்டவர் சொல்றதெல்லாம் கேட்டு அப்படியே செஞ்சாரு. மக்கள் எல்லாருக்கும் நல்லதும் செஞ்சாரு. ஒரு தடவை அவருடைய நாட்டுக்கு எதிரா மூன்று ராஜாக்கள் ஒன்னு சேர்ந்து சண்டைக்கு வந்துக்கிட்டு இருக்கிறாங்கன்னு செய்தியைக் கேட்டதும் ரொம்பவே பயந்திட்டாரு என்று பாட்டி சொன்னதும், பிரபு சொன்னான், பாட்டி பாத்தீங்களா, பாத்தீங்களா? ஒரு ராஜாவுக்கே பயம் வந்திருக்குதுனா எனக்குப் பயம் வராதா? என்றான். பயம் வந்துச்சு என்பது உண்மை தான். ஆனால் பயத்தை, எதிரிகளை எப்படி ஜெயிச்சாருனு கேளு என்றாங்க. அப்புறம் ஆண்டவரைப் பார்த்து பரலோகத்தில் இருக்கிற நீங்க தான் தேவன். என் தேவன், இப்ப



எதிரிகளை எதிர்த்து சண்டை போட எங்களுக்குப் பெலனுமில்லை, என்ன? செய்ய வேண்டியதுன்னும் தெரியவில்லை என்று ஜெபம் பண்ணினாரு. ஆண்டவரும் அவர்களோடு பேசினார். இந்த யுத்தம் உங்களுடையதல்ல தேவனுடையது. அதனால பயப்படாதீங்க!, கலங்காதீங்க!, நான் உங்களோடு இருக்கிறேன். நாளைக்கு நீங்க அவங்களுக்கு எதிரா புறப்பட்டுப் போங்கள் என்று ஆண்டவர் அவங்களோடு பேசி சொன்னாரு. அப்படியே மாறுநாள் காலையிலே ராணுவ வீரர்களெல்லாரும் யுத்தத்துக்கு அணிவகுத்து நிற்கும்போது அவங்களுக்கு முன்னாக ஆண்டவரைப் பாடித்துதிக்கிற ஒரு பாடகர் குழுவை, கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று துதிக்கும் பாடகர்களை நிற்கச் செய்தாரு அவங்க எல்லாரும் கர்த்தரை பாடி-த்துதிக்க ஆரம்பிச்ச உடனேயே எதிரிகள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டு அழிந்து போனார்கள். அதற்கப்புறம் அவங்க எதிரிகள் பயமில்லாமல், எந்தப் பயமுமில்லாமல் அமைதியாய், சந்தோஷமாய் இருந்தாங்க. (2 நாளா 20:1-30) பாட்டி நீங்க சொன்னதிலிருந்து எனக்குப் புரிஞ்சிருச்சு, நல்லாவே புரிஞ்சிருச்சு நமக்கு பயமோ, கவலையோ வந்தா இயேசப்பா கிட்ட சொல்லி, அவரைப் பாடி மகிமைப்படுத்தின பயமும் பறந்திடும், எதிரான மனிதர்களும், நமக்கு தீமை செய்ய மாட்டார்கள். இனிப் பயப்படாமல் ஸ்கூலுக்குப் போவேன். இயேசப்பாவை நல்லா பாட்டுப்பாடித் துதிப்பேன். வாங்க பாட்டி இப்பவோ இரண்டு பேரும் பாடுவோம் என்று பிரபு பாட்டியைக் கூப்பிட இரண்டு



## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா ஸ்கூலுக்குப் போகும் போதும், வரும்போதும் எனக்குத் துணையாய் வாங்கப்பா. தீய நண்பர்கள், தீமைகளுக்கு விலக்கிப் பாதுகாத்துக் கொள்ளுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே.

## மனப்பாட வசனம்

பயப்படாதே! நான் உனக்குத் துணை நிற்கிறேன்.
ஏசாயா 41:14.



சாட்சி பகுதி

# மனவிருப்பத்தை நிறைவேற்றுகிறவ



**சகோதரி. வெண்ணிலா - திருப்பத்தூர்**

கடந்த வருடத்தில் என் மகளுக்கும், மகனுக்கும் திருமண காரியத்திற்காக ஜெபிக்குமாறு தொலைபேசியில் தங்களுடன் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். தினமும் நேரலை நிகழ்ச்சியிலும் ஜெப வேளையில் நாங்களும் இணைந்து ஜெபித்தோம். தேவன் எங்கள் பிள்ளைகளின் வாழ்வில் பெரிய காரியங்களைச் செய்தார். முதலில் என் மகளுக்கு திருமண காரியத்தை தேவன் வாய்க்கச் செய்தார். எல்லாரும் ஆச்சரியப்படுமாறு தேவன் திருமணத்தை நடத்தித் தந்தார். தேவைகளைச் சந்தித்து மீதம் எடுக்க வைத்தார். பின்பு சில மாதங்களிலேயே என் மகனுக்கு ஏற்றதுணையை தேவன் தந்து, அவர்கள் திருமணமும் நேர்த்தியாக நடைபெறவும், தேவநாமம் மகிமைப்படவும் செய்தார். எந்த குறையும் இல்லாமல், எந்த கடனும் இல்லாமல் ஒரே வருடத்தில் இரண்டு பிள்ளைகளின் திருமண காரியத்தையும் நேர்த்தியாய், செம்மையாய் நடத்தி தந்த தேவாதி தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.

**சகோதரி. ஜாக்குலின் - திண்டுக்கல்**

கடந்த நாட்களில் எனக்கு ஆண்குழந்தை வேண்டும் என்று எனக்காக ஜெபிக்குமாறு தொலைபேசி வாயிலாகவும், வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்தில் வைத்து நடைபெற்ற உபவாச ஜெபத்திலும் கலந்து கொண்டு ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். தேவன் ஜெபத்திற்கு பதில் தந்தார். கடந்த டிசம்பர் மாதத்தில் ஆண்குழந்தையை பெற்றெடுக்க தேவன் கிருபை செய்தார். என் தலையை என்னை சுற்றியிருந்த என் சொந்தங்களுக்கு முன்பாக உயர்த்தி, எனக்கு ஆண்குழந்தை பிறக்காது என்று சொன்ன ஜனங்களுக்கு முன்பாக மேன்மைப்படுத்தின கர்த்தருக்கு ஸ்தோத்திரம். குழந்தை பிறந்தவுடன் மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு தனியாக வைத்து பராமரித்தார்கள், அதிலிருந்து விரைவில் தேவன் என் குழந்தைக்கு பரிபூரண சுகத்தை கொடுத்தார். தற்போது தாயும் சேயும் சுகமாயிருக்கிறோம். எனக்கு அற்புதம் செய்த தேவாதி தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

**சகோதரர். மேத்யூ - மதுரை**

நான் மிகவும் சோர்ந்து போன நிலையில் மனம் உடைந்து இருந்தேன். அப்பொழுது இயேசுவை தினம் பார்க்கிறேன் என்ற மாத பத்திரிக்கை எனக்கு கிடைத்தது. அதில் எழுதி இருந்த தேவனுடைய வார்த்தைகள் என்னைத் தொட்டது. ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை என்ற வார்த்தையும், நம்முடைய சத்துருக்களுக்கு எதிராக தேவனுடைய கரம் செயல்படும் என்ற வார்த்தையும் என்னை அதிகமாக தேற்றியது, தேவன் இந்த வார்த்தைகளின் முலம் என்னைப் பெலப்படுத்தினார். இந்த பத்திரிக்கைக்காக நான் தேவனைத் துதிக்கிறேன்.



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L.VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY

: GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

## 5) மணியார்டர்(E.M.O) :

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள் தேவை

📍 இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

**MANAGER - MEDIA OPERATIONS** #On Site

Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

**GRAPHIC DESIGNER** #Hybrid

Should have vast knowedgle in Corel Draw Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform design work as per the platforms.

**CONTENT WRITER** #Hybrid

Should have a biblical knowledge to write the content both in print media as well as in the Digital Platforms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

**PROGRAM PRODUCER / DIRECTOR** #On Site

Planning and creating new program as per the inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting. Knowledge in Target Audience is a must.

**VIDEO EDITOR** #Hybrid

Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. With creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard.

**SOUND ENGINEEER** #On Site

Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addition the Live Broadcasting in realtime.

## Available Positions :

**MOTION GRAPHICS DESIGNER** #Hybrid

Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

**CAMERAMAN** #On Site

Shoud Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology.

**PHOTOGRAPHER** #On Site

Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi- ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/
OR
Email : connect@dprince.in
OR
Whatsapp : +91 7825 04 7825
OR
Whatsapp : +91 9498 00 0449

- * Any UG/PG Candidates with respective Skill
- * Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
- * Experienced Staffs will be given Good Remuneration.
- * Food And Accomodation will be provided.
- * Male & Female can Apply.
- * Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.

நடப்பு செய்திகள்

# நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் சப்போட்டா பழம்.

சப்போட்டாவில் உள்ள நார்ச்சத்து செரிமான ஆரோக்கியத்தை மேம்படுத்தி சீராக கழிவுகள் வெளியேறுவதற்கு உதவுவதோடு மலச்சிக்கல் ஏற்படாமலும் தடுக்கிறது. இனிப்பு மற்றும் கேரமல் போன்ற சுவைக்காக அனைவராலும் விரும்பி சாப்பிடக்கூடிய பழம் சப்போட்டா. இந்தப் பழத்தில் நம் உடலுக்கு தேவையான வைட்டமின், தாதுக்கள், நார்ச்சத்துகள் உள்ளது.

சப்போட்டா பழத்தை அப்படியே கடித்து சாப்பிடலாம் அல்லது ஜூஸாகவோ பருகலாம் அல்லது வேறு உணவுகளோடு சேர்த்து சாப்பிடலாம். இந்தக் கட்டுரையில் சப்போட்டா பழத்திலிருந்து கிடைக்கும் பயன்கள் மற்றும் எந்த வகைளில் எல்லாம் சாப்பிடலாம் என்பதை தெரிந்துகொள்வோம். 200 கிராம் சப்போட்டா பழத்தில் உள்ள ஊட்டச்சத்துகள்: கலோரி: 160 கிராம், கார்போஹைடரேட்: தோராயமாக 40 கிராம், இதில் பெரும்பாலும் இயற்கையிலான சர்க்கரை வடிவத்தில் இருக்கிறது. புரதம்: 2 கிராம், கொழுப்பு: 1 கிராம், நார்ச்சத்து: சுமார்
1 கிராம், வைட்டமின் ஏ: நமக்கு தினசரி தேவைப்படும் அளவில் 20% உள்ளது. வைட்டமின்
சி: நமக்கு தினமும் தேவைப்படும் அளவில் 50% இருக்கிறது. வைட்டமின் இ: நமது சரும ஆரோக்கிய-த்திற்கு உதவும் வகையில் கொஞ்சமாக உள்ளது.

## சப்போட்டா பழத்தின் மருத்துவ பயன்கள்

**அதிகமான ஊட்டச்சத்து:**

நாம் சுவைத்து சாப்பிடும் சப்போட்டா பழத்தில் வைட்டமின் ஏ, சி மற்றும் இ, பொட்டாசியம், காப்பர், இரும்புச்சத்து, நார்ச்சத்து ஆகியவை நிறையவே உள்ளது.

நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தும்:

சப்போட்டாவில் உள்ள வைட்டமின் சி நமது நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தி, பல நோய்கள் மற்றும் தொற்றுகள் ஏற்படாமல் பாதுகாக்கிறது.

**செரிமான ஆரோக்கியம்:**

சப்போட்டாவில் உள்ள நார்ச்சத்து செரிமான ஆரோக்கியத்தை மேம்படுத்தி சீராக கழிவுகள் வெளியேறுவதற்கு உதவுவதோடு மலச்சிக்கல் ஏற்படாமலும் தடுக்கிறது.

**இதய நலன்:**

சப்போட்டாவில் உள்ள பொட்டாசியம் ரத்த அழுத்தத்தை ஒழுங்குபடுத்தி இதய நோய் வரும் ஆபத்தைக் குறைக்கிறது.

**ஆண்டி ஆக்ஸிடெண்ட் பண்புகள்:**

சப்போட்டா பழத்தில் வைட்டமின் சி மற்றும் வைட்டமின் இ போன்ற ஆண்டி ஆக்ஸிடெண்ட் உள்ளது. இது நமது உடலில் உள்ள ஃப்ரீ ரேடிகல்ஸை சமநிலைப்படுத்தி நாள்பட்ட நோய் வரும் ஆபத்தைக் குறைக்கிறது.

**ஆரோக்கியமான சருமம்:**

சப்போட்டா பழத்தில் உள்ள வைட்டமின் ஏ மற்றும் இ, நமது சரும ஆரோக்கியத்தை மேம்படுத்தி இளமை தோற்றத்தை தருகிறது.

**ஹீமோகுளோபின் அளவை மேம்படுத்துகிறது:**

சப்போட்டாவில் உள்ள இரும்புச்சத்து நமது உடலில் உள்ள ஹீமோகுளோபின் அளவை ஆரோக்கியமாக வைத்திருப்பதோடு ரத்தசோகை நோய் வராமலும் தடுக்கிறது.

**அழற்சி எதிர்ப்பு பண்புகள்:**

சப்போட்டா பழத்தில் உள்ள சில கலவைகளில் அழற்சி எதிர்ப்பு பண்புகள் உள்ளது.


அன்றன்றுள்ள அப்பம்
71th திருப்பத்தூர்
பரிசுத்த உபவாச முகாம்
பிப்ரவரி 1, 2, 3
இடம்
அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம்
திருப்பத்தூர் மாவட்டம்
தொடர்புக்கு - 9884908777, 9962648777


நம்பிக்கையின் இரவு
NIGHT OF HOPE
LIVE
புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்
ஜனவரி
31
இரவு 10.30 மணி
முதல் 12.30
மணி வரை
பிப்ரவரி
29
இரவு 10.30 மணி
முதல் 12.30
மணி வரை
உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்.
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய எண்
944 28 00 449
நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2024-2026
WPP Registration No. TN/WPP-40/SR/2024-2026
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S




If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.